17.10.2015

தினமலர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## வேளாண் பல்கலை துணைவேந்தர் பதவிக்கு 45 பேர் போட்டி

கோவை:தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் பதவியை கைப்பற்ற, 45 பேர் போட்டியிடுகின்றனர்.கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி, ஆக.,26ல் ஓய்வு பெற்றார். தற்போது, புதிய துணைவேந்தர் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதற்கென மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளது.ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி வேதநாராயணன் குழு தலைவராகவும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக இயக்குனர் ஐயப்பன், மேலாண் வாரியம் சார்பில் சித்தானந்தம், குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.துணைவேந்தர் பதவிக்கு, நேற்று முன்தினம் வரை, 45 பேர் விண்ணப்பித்துள்ளனர். 'இந்த, 45 பேரில் இருந்து, மூவரை மட்டும் தேர்வு செய்து, தமிழக அரசுக்கு, குழுவினர் அனுப்பி வைப்பர். அந்த மூவரில் ஒருவரை, துணைவேந்தராக அரசு நியமிக்கும்' என்று, அதிகாரிகள் தெரிவித்தனர்.பேராசிரியர் ஒருவர் கூறுகையில், 'இதுவரை மறைமுகமாக நடந்து வந்த துணைவேந்தர் தேர்வு, நடப்பாண்டு வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது வரவேற்பை பெற்றுள்ளது. அதனால்தான், அதிகப்படியான விண்ணப்பங்கள் வந்துள்ளன' என்றார்.

## 'விவசாயிகளின் பிரச்னையை தீர்க்க கடன் வாங்குங்கள்'

பெங்களூரு,: “வறட்சி நிவாரண பணிகளுக்கு, 500 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கும்படி, மத்திய அரசிடம் கேட்பதற்கு பதிலாக, கடன் வாங்கியாவது, விவசாயிகளின் கடனை ரத்து செய்யுங்கள்,” என, மாநில ம.ஜ.த., தலைவர் குமாரசாமி வலியுறுத்தி உள்ளார். விதான் சவுதாவில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:காங்., தேசிய துணைத்தலைவர் ராகுல், கர்நாடகாவுக்கு வந்து சென்றதால், விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவில்லை. அவரது வருகைக்காக செலவழித்த பணத்தை, தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு, தலா, 10 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கியிருக்கலாம்.

அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்தி, அந்த பணத்தை விவசாயிகளின் நலனுக்காக பயன்படுத்த வேண்டும். வறட்சியை காரணம் காண்பித்து, 500 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கும்படி, மத்திய அரசிடம் தலை குனிந்து, கை நீட்டி பிச்சை கேட்பதற்கு பதிலாக, கடன் வாங்கியாவது, விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்; அவர்கள் தற்கொலை செய்து கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.வறட்சி நிவாரண பணிகளுக்கு, 531 கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக, அரசு கூறுகிறது. ஆனால், எங்குமே வறட்சி நிவாரண பணிகள் நடக்கவில்லை. அத்துடன், விளைச்சலை பறிகொடுத்த விவசாயிகளுக்கும் நிவாரண நிதி தரப்படவில்லை. விவசாயிகளுக்கு உரிமை பத்திரம் வழங்கும் விஷயத்தில், அரசின் செயல்பாடுகளுக்கு, சபாநாயகர் திம்மப்பா அதிருப்தி தெரிவித்து, 'முதல்வரின் காலில் விழுகிறேன்; விவசாயிகளுக்கு உரிமை பத்திரம் தாருங்கள்' என, கெஞ்சும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின், 224 எம்.எல்.ஏ.,க்களையும் கட்டுப்படுத்தும் சபாநாயகருக்கே இந்த நிலை என்றால், மற்றவர்களின் கதி என்ன?கோட்டும், சூட்டும் அணிந்தவரிடமிருந்து மட்டுமல்ல, வேட்டி, ஜிப்பா

அணிந்தவரிடமிருந்தும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் விதிகளில் திருத்தம் செய்ய அரசு முடிவு

பெங்களூரு: “கடன் தொல்லை, விளைச்சல் நஷ்டத்தால், தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு, நிவாரணம் வழங்குவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளில், திருத்தம் கொண்டு வர, அரசு தீர்மானித்துள்ளது,” என, கூட்டுறவு துறை அமைச்சர் மஹாதேவ பிரசாத் தெரிவித்தார்.பெங்களூரில், நிருபர்களிடம் அவர் கூறியதாவது:தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு, அரசு அளிக்கும் நிவாரண தொகையை, 2 லட்சம் ரூபாயில் இருந்து, 5 லட்சம் ரூபாயாக உயர்த்துவதாக, முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார். தற்கொலை செய்து கொண்ட விவசாய தொழிலாளர்களுக்கும், இதே அளவு நிவாரண தொகை வழங்குவதாகவும் கூறியுள்ளார். இதற்காக நிவாரண தொகை வழங்குவதற்கான விதிமுறைகளில், திருத்தம் கொண்டு வரப்படும். வேறொருவரின் நிலத்தை குத்தகைக்கு பெற்று, விவசாயம் செய்து வரும் விவசாய தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டால், அவர்களுக்கும் நிவாரண தொகை கிடைக்க வேண்டும் என்பது, முதல்வர் சித்தராமையாவின் நோக்கம். அவர்கள் குடும்பத்தினருக்கும், நிவாரண தொகை வழங்கும்படி, கலெக்டர் தலைமையிலான குழுக்களுக்கு, முதல்வர் உத்தரவிட்டு உள்ளார்.இவ்வாறு அவர் கூறினார்.

## கணவாய் மீன் குஞ்சுகளை வளர்த்து கடலுக்குள் விடும் திட்டம்: இயக்குனர் தகவல்

துாத்துக்குடி :துாத்துக்குடியில் மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் சார்பில், கணவாய் மீன்களை வளர்த்து கடலுக்குள் விடும் முன் மாதிரி

திட்டத்தை, அதன் இயக்குனர் கோபாலகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.துாத்துக்குடியில் உள்ள மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் சார்பில், கடலுக்குள் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலையில் சிக்கும் கணவாய் மீன் முட்டைகளின் குவியலை சேகரித்து, ஆய்வகத்தில் குஞ்சு பொறிக்க வைத்து வளர்த்து, மீண்டும் கடலுக்குள் விடும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளனர்.பொதுவாக மீனவர்களின் வலையில் விழும் கணவாய் மீன் முட்டைக்குவியல்களை, மீனவர்கள் வீணாக்கி வருகின்றனர்.இவற்றை சேகரித்து, மீன் வள ஆராய்ச்சி மையம் குஞ்சு பொறிக்க வைத்து, 45 நாட்களுக்குப்பின் மீனவர்களிடம் கொடுத்து மீண்டும் கடலுக்குள் விடுவது தான், இத்திட்டம். இதன் மூலம் குறைந்து வரும் கடல் மீன் வளத்தை அதிகரிக்க செய்ய முடியும். இத்திட்டத்தை துவக்கி வைத்து, கடல் மீன் வள ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் ஏ.கோபாலகிருஷ்ணன் பேசியதாவது: இந்தியாவில் கடல் மீன் வளம் குறைந்து கொண்டே வருகிறது. கடல் மீன் வளத்தை பெருக்குவதற்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. கணவாய் மீன்களின் முட்டைகளை சேகரித்து, அவற்றை பொறிக்க வைத்து மீண்டும் கடலுக்குள் விடும் போது, கடல் மீன் வளம் அதிகரிக்கும்.

மாற்று தொழில் நுட்பம், கூண்டுகளில் மீன் வளர்க்கும் திட்டம். இத்திட்டத்தின் கீழ், கேரள, ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மேற்கு வங்கம் ஆகிய பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடல் பகுதிகளில் 300 மீட்டர் நீளத்தில், ஆறு மீட்டர் ஆழம் உள்ள பகுதிகளில் கூண்டுகள் அமைத்து, அவற்றில் கொடுவாய், கடல்விரால், முட்டைப்பாறை ஆகிய மீன்களை வளர்த்து அதன் மூலம் லாபம் ஈட்டி வருகின்றனர்.

இது கடல் மீன் வளம் அழிந்து வரும் நிலையில், இந்த தொழில் நுட்பம் மூலம் கடற்கரை பகுதிகளில், இந்த கூண்டுகள் அமைத்து மீன் வளர்த்து

அறுவடை செய்யப்படுகிறது. தற்போது இந்தியாவில் 350 இடங்களில் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2017 க்குள் ஆயிரம் இடங்களில் கூண்டுகள் அமைக்க வேண்டும், என்ற குறிக்கோளுடன், கடல் மீன் வள ஆராய்ச்சி மையம், செயல்பட்டு வருகிறது. இது போன்ற மாற்று தொழில் நுட்பம் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, என பேசினார்.நிகழ்ச்சியில், விஞ்ஞானி ஜெகதீசன் வரவேற்றார்.துாத்துக்குடி மைய பொறுப்பாளர் மனோஜ்குமார்,மீன் வளத்துறை துணை இயக்குனர்கள் ஐசக்ஜெயக்குமார், சிவக்குமார் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டு மீனவர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர். கணவாய் மீன் குஞ்சுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. மீன் வள ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகள் குறித்த புத்தகம் வெளியிடப்பட்டது.

**கும்லா, குதுப்பு மீன்கள் 'எஸ்கேப்': மீன் ஆராய்ச்சியாளர் தகவல்**



ராமேஸ்வரம்: சுனாமிக்கு பிறகு கும்லா, குதுப்பு உள்ளிட்ட மீன்கள் இடம் பெயர்ந்து விட்டதாக மத்திய மீன்துறை ஆராய்ச்சியாளர் தெரிவித்தார்.தமிழகத்தில் இரு கடல் பகுதியாக வடக்கில் பாக்ஜலசந்தி வங்க கடலிலும், தெற்கில் மன்னார் வளைகுடா அரபிக் கடலிலும் மீனவர்கள் மீன்பிடிக்கின்றனர். இதில் ஆழ்கடலில் சிக்கும் மீன்கள் தான்,

மீனவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. தட்பவெப்ப நிலை மாற்றம், கடல் நீரோட்டத்தால் மீன்கள் இடம் பெயர்வு, மீன்கள் வளர்ச்சி, வரத்து, அழிவின் விளிம்பில் உள்ள மீன்கள் குறித்து மண்டபத்தில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்கின்றனர். ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதியில் மீனவர் வலையில் சிக்கும் மீன்கள் வளர்ச்சி, அதிக வரத்து மற்றும் குறைவு குறித்து ஆய்வு செய்கின்றனர். சில வகையான மீன்களை சேகரித்து அதன் உடல் கூறுகள் குறித்த ஆய்வுக்கு விஞ்ஞானிகள் எடுத்து சென்றனர். பாம்பனில் மீனவர்களுக்கு லாபம் தரக்கூடிய வெளமீன், பாரை மீன், டியூப் கணவாய், காரல் மீன்கள் அதிகளவில் வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.மண்டபம் மீன்துறை ஆராய்ச்சியாளர் சூர்யா கூறியதாவது: இந்தாண்டில் பாம்பன், ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் வலையில் பாரை மீன், வெளமீன், கணவாய், காரல் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் தமிழக வடக்கு, தெற்கு கடலில் டன் கணக்கில் சிக்கும் கும்லா, குதுப்பு மீன்கள் வரத்து குறைந்துள்ளது. காரணம், 2004ம் ஆண்டு சுனாமிக்கு பிறகு தட்பவெப்பநிலை மாற்றத்தால் மீன்கள் இடம் பெயர்ந்து சென்றிருக்கலாம். மீனவர்கள் இழுவை வலை மீன்பிடிப்பு முறை தவிர்த்தால் மீன் இனம் பெருகும் என்றார்.

## மன்னார் வளைகுடாவில் 5 வகை கடல் ஆமைகள் மீனவர் வலையில் சிக்கி அழிகிறது



ராமநாதபுரம், :மன்னார் வளைகுடா பகுதியில் 5 வகை கடல் ஆமைகள் உள்ளன. சரியான அணுகுமுறை இல்லாததால் அவை மீனவர்களின் வலையில் சிக்கி அழிகின்றன.உலகில் 225 வகை கடல் ஆமைகள் உள்ளன. இதில் பச்சை அல்லது பேராமை, பெருந்தலை, தோணி அல்லது ஏழுவரை, ஆலிவ் அல்லது சித்தாமை, அலுங்கு ஆகிய 5 வகை ஆமைகள் நம் நாட்டில் காணப்படுகின்றன. இந்த 5 வகைகளும் மன்னார் வளைகுடாவில் காணப்படுவது தனிச்சிறப்பு.பேராமை கடற்பாசிகளையும், அலுங்கு ஆமை கடற்பஞ்சுகளையும், பெருந்தலை ஆமை நண்டுகள், மெல்லுடலிகளையும், தோணி ஆமை ஜெல்லி மீன்களையும் உணவாக உட்கொள்ளும். ஆமைகளின் கண்கள் சிறிதாக இருந்தாலும் அனைத்து வண்ணங்களையும் பார்க்க முடியும். தோல் கடினமாக இருக்கும். ஆழ்கடலில் இனப்பெருக்கம் செய்யும். கருவுற்ற பெண் ஆமை கரையை நோக்கி கூட்டமாக நீந்தி சென்று மணப்பாங்கான இடத்தில் முட்டை இடும். இதற்காக பல ஆயிரம் கி.மீ., செல்லும். பெருந்தலை ஆமைகளை தவிர மற்றவை இந்திய கடற்கரையில் ஏதாவது ஒரு பகுதியில் முட்டையிடும். 50 முதல் 80 செ.மீ., ஆழத்தில் குழி தோண்டி 200 முட்டைகள் வரை இடும். பின் அவற்றை மூடிவிடும். நவம்பர் முதல் ஏப்ரல் வரை முட்டையிடும் பருவம்.

தமிழகத்தில் தரங்கம்பாடி-பழையாறு கடற்கரை, மாமல்லபுரம்- சென்னை கடற்கரை, பாயின்ட் காலிமர்-நாகப்பட்டினம் கடற்கரை பகுதிகளில் முட்டை இடுகின்றன. சித்தாமைகள் அதிகளவில் சென்னை கடற்கரையில் முட்டையிடுகின்றன. சூரிய வெப்பத்தில் 60 முதல் 90 நாட்களில் முட்டை பொரித்து வெளிவரும் குஞ்சுகள் ஊர்ந்து சென்று கடலை அடையும்.இவை மீன்பிடி விசை படகுகள், வலைகளால் அதிகளவு பாதிக்கப்படுகின்றன. சில இடங்களில் உணவு, தோலுக்காக கொல்லப்படுகின்றன. அதன் முட்டைகளை விலங்குகள் சேதப்படுத்துகின்றன. இதனால் ஆமைகள் அரிதாகி வருகின்றன. வனத்துறையினர் கூறியதாவது: ஆமைகளை பாதுகாக்க வனஉயிரின பாதுகாப்பு சட்டத்தில் அட்டவணை 1 ல் கொண்டு வரப்பட்டுள்ளது. இவை மீன் வலைகளில் சிக்காமல் இருக்க 'டெட்' என்ற ஆமை தவிர்ப்பு கருவியை பொருத்த மீனவர்களிடம் வலியுறுத்துகிறோம். ஆமைகளை பிடித்தால் 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறையும், அபராதமும் விதிக்கப்படும், என்றனர்.

## வடகிழக்கு பருவமழை எப்படி இருக்கும்: கணிப்பை வெளியிட்டது வேளாண் பல்கலை

கோவை: இந்த ஆண்டு, வடகிழக்கு பருவமழை எப்படி இருக்கும்' என்பது குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை, கால நிலை ஆய்வு மையம் கணிப்பை வெளியிட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை காலம், அக்டோபரில் துவங்கி, டிசம்பர் வரை நீடிக்கும். இந்தாண்டு, இக்காலகட்டத்தில் மழைப்பொழிவு எப்படியிருக்கும் என்பது குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை, காலநிலை ஆய்வுமையம் ஆய்வு மேற்கொண்டது.

பசிபிக் பெருங்கடலில், பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள, கடற்பகுதியின்

மேற்பரப்பு நீரின் வெப்பநிலை, தென்மண்டல காற்றழுத்தக் குறியீடு அடிப்படையில், கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, தமிழகத்தில், வடகிழக்குப்பருவமழை, 80 சதவீதம் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.ஈரோடு, திருப்பூர் சேலம், தர்மபுரி, தஞ்சாவூர், திருச்சி, அரியலுார், பெரம்பலுார், கடலுார், நாகப்பட்டினம், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, துாத்துக்குடி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், வேலுார், திருவண்ணாமலை, சென்னை, கன்னியாகுமரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில், சராசரி மழை பெய்யும். கோவை, கரூர், திருவாரூர், திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சராசரிக்கும் அதிகப்படியான மழை பெய்யும். 'இது பற்றிய மேலும் விவரங்களை, வேளாண் பல்கலை காலநிலை ஆய்வு மையத்தில் கேட்டறியலாம்' என்று, ஆய்வு மைய தலைவர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

**சாண வறட்டி விற்பனை: 'ஆன்லைனில்' அமோகம்!**



நம் கிராமங்களில் பயன்பாட்டில் இருந்து, மறைந்து போன சாண வறட்டிக்கு, வெளிநாடுகளில் அமோக வரவேற்பு கிடைத்துஉள்ளது. 'ஆன்லைன்' விற்பனையிலும் கொடி கட்டிப் பறக்கிறது.இந்தியாவில், அடுப்பு எரிக்க விறகுக்கு அடுத்தபடியாக, மாட்டுச் சாணத்தில் தயாரான வறட்டிகள், அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. வீட்டில் மாடு

வளர்க்காதவர்கள், அவற்றை விலைக்கு வாங்கி பயன்படுத்தி வந்தனர்.ஆனால், காஸ் சிலிண்டர் அறிமுகமான பிறகு, வறட்டியின் பயன்பாடு, படிப்படியாக குறைந்து, இப்போது மறைந்தே போய் விட்டது. யாகங்கள், ஹோமங்களுக்கு மட்டுமே இப்போது வறட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.அதேபோல், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் இப்போது, வறட்டி பயன்படுத்த துவங்கியுள்ளனர். ஆன்லைன் மூலம் வறட்டி வாங்கி உபயோகிக்கின்றனர்.வெளிநாடுகளில் வசித்தாலும், மரபுகளை பின்பற்றிவரும் பலர், பூஜை, ஹோமம் போன்றவற்றை நடத்துகின்றனர். அவர்களின் தேவையை உணர்ந்த, ஆன்லைன் வர்த்தக இணைய தளங்கள் சில, வறட்டிகளை விற்பனை செய்ய துவங்கியுள்ளன.இதை பார்த்த நமது ஊர் மக்களும், ஆன்லைனில் வறட்டிகளை ஆர்டர் செய்யத் துவங்கியுள்ளனர். நான்கு வறட்டிகள், 40 ரூபாய்க்கு விற்கப்டுகின்றன. இதை, ஏராளமானோர் விரும்பி வாங்குகின்றனர்.

அமெரிக்காவில் இருந்து இயங்கும், 'அமேசான்.காம்' வர்த்தக இணைய தளம், இதை வெளிநாட்டில் சப்ளை செய்யும் நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது.இதைப் பார்த்து, இந்திய இணைய தளங்களும், வறட்டி விற்பனையில் களம் இறங்கியுள்ளது. cowdungcake sale என்று, டைப் செய்து, இணையத்தில் தேடினால், விற்பனை செய்யும் இணைய தளங்களை கண்டறிந்து, வறட்டிகளை வாங்கலாம்.

## பயிர் வளர்ச்சிக்கு 'நீம் கோட்டட் யூரியா' அறிமுகம்

திண்டுக்கல்: தமிழகத்தில் பயிர் வளர்ச்சிக்கு 'வேப்பெண்ணெய் கலந்த யூரியா' (நீம் கோட்டட் யூரியா) உரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.நெல், கரும்பு, பயறு வகை பயிர்களின் வளர்ச்சிக்கு மிக அவசியமானது தழைச்சத்து. யூரியாவில் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது. யூரியாவானது

'அமோனியா' என்ற வேதிப்பொருளில் இருந்து தயாரிக்கப்படுவதால், காற்றில் கரையும் தன்மை அதற்கு உள்ளது. யூரியாவில் உள்ள தழைச்சத்து ஆவியாகும் என்பதால், அதனை பயிர்களுக்கு இடும்போது 20 முதல் 25 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது. இதனை சரிசெய்ய மத்திய அரசு யூரியா உற்பத்தி செய்யும் நிறுவனங்களை, 'நீம் கோட்டட் யூரியா'வாக (வேப்ப எண்ணெய் கலந்த யூரியா) தயாரிக்குமாறு அறிவுறுத்தியது.யூரியா தயாரிக்கும் நிறுவனங்கள், 85 சதவீத அளவிற்கு வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவாக தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது: வேப்பெண்ணெய் யூரியாவை பயன்படுத்தினால், பயிருக்கு இடும் உரத்தின் அளவில் 10 முதல் 15 சதவீதம் வரை குறைத்து இடலாம். மேலும், மண் மூலம் பரவும் நோய்கள், பூச்சிகள் மற்றும் புழுக்களுக்கு எதிராக யூரியா உரம் செயல்பட்டு பயிருக்கு பாதுகாப்பு அளிக்கிறது. சாதாரண யூரியாவை காட்டிலும், வேப்ப எண்ணெய் கலந்த யூரியா சிறப்பான பயனளிக்கும். இனி வரும் காலங்களில் விவசாயிகள் வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை வாங்கி பயன்படுத்தலாம். இதனை 50 கிலோ மூடை ரூ.284 க்கு விற்பனை செய்ய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (சாதாரண யூரியா மூடை ரூ.270).மேலும், விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் கிடங்கியில், இவற்றின் இருப்பு தொகையை அறிந்து கொள்ளலாம்.

## பறக்குது பருப்பு விலை: பதுக்கல் நடப்பது எங்கே?



சென்னை: தமிழகத்தில், எப்போதும் இல்லாத வகையில், துவரம் பருப்பு விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ, 195 ரூபாய்; பாக்கெட் பருப்பு கிலோ, 210 ரூபாயாக உள்ளது.வட மாநிலங்களில் பருப்பு விளைச்சல் குறைவால், தமிழகத்திற்கான வரத்து குறைந்துள்ளது. தேவைக்கேற்ப பருப்பு கிடைக்காததால், இரண்டு மாதங்களாக, பருப்பு விலை உயர்ந்து வருகிறது. சாப்பாடு விலை உயர்வு100 கிலோ எடையுள்ள, ஒரு மூட்டை துவரம் பருப்பு, நேற்று முன்தினம் வரை, 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது; நேற்று திடீரென, 1,500 உயர்ந்து, 18 ஆயிரத்து, 500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.சில்லரையில் ஒரு கிலோ, 180லிருந்து, 195 ரூபாயாகவும், பாக்கெட் பருப்பின் விலை, 210 ரூபாயாகவும் விற்கப்படுகிறது. நான்கு நாட்களுக்கு முன், கிலோவுக்கு, 20 ரூபாய் விலை உயர்ந்த உளுத்தம் பருப்பு, கிலோ, 170 ரூபாய்; பாசி பருப்பு, கிலோ, 130 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

சர்க்கரை, புளி, பூண்டு, தனியா, மிளகாய் வற்றல் என, மற்ற அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால், ஓட்டல்களில் சாப்பாடு விலை, 5 ரூபாய் உயர்ந்துள்ளது. மற்ற உணவுப் பொருட்களின் விலையும், 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

## சிறப்பு கவனம் வேண்டும்:

நிலைமையை சமாளிக்க, மத்திய அரசு, பருப்பு வகைகளில், தலா, 5,000 டன் இறக்குமதி செய்துள்ளது. கூடுதலாக, துவரம் பருப்பு, 3,000 டன் இறக்குமதி செய்தும், விலை குறையவில்லை. இதற்கு, 'ஆன்லைன்' வர்த்தகமும், பதுக்கலுமே காரணம் என, கூறப்படுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருளான பருப்பு விலையை, கட்டுக்குள் கொண்டு வர, மத்திய, மாநில அரசுகள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்பதே, மக்களின் விருப்பம்.

## கண்காணிப்பு குழு ஆய்வு:

தமிழக அரசு, உணவுத் துறை அமைச்சர் காமராஜ் தலைமையில், விலை கண்காணிப்பு குழுவை அமைத்துள்ளது. இதில், தலைமை செயலர், நிதி, வேளாண், உணவுத் துறை அதிகாரிகள் உள்ளனர். பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த, விலைவாசி கண்காணிப்பு குழு அதிகாரிகள், முக்கிய நகரங்களில் உள்ள, மொத்த விலை அங்காடிகளில் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர்.**இதுகுறித்து, அதிகாரிகள் கூறியதாவது:**தமிழக பருப்பு வியாபாரிகளிடம், இரண்டு மாத இருப்பு உள்ளதாகவும், தீபாவளியை முன்னிட்டு, செயற்கையாக விலை உயர்த்தப்படுவதாகவும், தகவல் வந்துள்ளது. எனவே, சென்னை, மதுரை, திருச்சி உள்ளிட்ட முக்கிய நகரங்களில், பருப்பு மொத்த வியாபாரிகளிடம் ஆய்வு நடத்தப்படுகிறது. செயற்கையாக விலை உயர்வு இருந்தால், கடை உரிமம் ரத்து; உரிமையாளருக்கு சிறை போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆழியாறு படுகை பாசனத்திற்கு எதிர்பார்ப்பு! 60 நாட்கள் தண்ணீர் வழங்க கோரிக்கை

பொள்ளாச்சி: 'ஆழியாறு படுகை பாசனத்தில், குறைந்தபட்சம் 60 நாட்களாவது தண்ணீர் வழங்க வேண்டும்,' என விவசாயிகள் வலியுறுத்தி

வருகின்றனர். இப்பிரச்னை குறித்து, பொதுப்பணித்துறை அமைச்சரை சந்தித்து மனு அளிக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், எட்டு அணைகளின் முதன் முதலில், கட்டப்பட்டது ஆழியாறு அணைதான். தமிழக அரசு ஆணையின்படி, 1955 ஆக., 31ன் படி, பி.ஏ.பி., திட்டத்தில், ஆழியாறு அணை துவங்கப்பட்டு, 1962ல் கட்டுமானப்பணி முடிந்து, ஆயக்கட்டுக்குட்பட்ட முழுமையான நிலப்பரப்புக்கும், 135 நாட்கள் தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டது.

ஆழியாறு பாசனப்பகுதிகளில், பொள்ளாச்சி கால்வாய், வேட்டைக்காரன்புதுார் கால்வாய், சேத்துமடை கால்வாய், ஆழியாறு பீடர் கால்வாய் ஆகிய பாசனப்பகுதிகளில், மொத்தம், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இதை இரண்டாக பிரித்து, 'ஏ' மற்றும் 'பி' பிரிவு என, 135 நாட்கள் தண்ணீர் பாய்ந்து வந்தது. கிடைக்கும் தண்ணீரை நம்பி, வேளாண்துறையின் பரிந்துரையின்படி, விவசாயிகள் தென்னை சாகுபடி செய்யத்துவங்கினர். தற்போது மொத்த சாகுபடி பரப்பில், 80 சதவீதம் தென்னை சாகுபடியும், வடிகால் வசதி இல்லாத குழிப்பாங்கான நிலம், 20 சதவீதத்தில் நஞ்சை பயிரான நெல் மற்றும் மக்காச்சோளம், நிலக்கடலை பயிரிடப்படுகிறது.

இந்நிலையில், ஆழியாறு படுகை பாசன பரப்புகளையும், பி.ஏ.பி., திட்டம் என்ற தலைப்பில், 3,77,152 ஏக்கர் திருமூர்த்தி அணை மூலம் பாசனம் பெறும் பாலாறு படுகையுடன் இணைக்கப்பட்டது. பாலாறு படுகைக்கு வழங்குவது போன்று, ஆழியாறு படுகைக்கும் தண்ணீர் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், கடந்த 2009ம் ஆண்டு வரை தண்ணீர், 90 நாட்களுக்கு மேல் வழங்கப்பட்டது. இந்நிலையில், பாலாறு படுகைக்கு, 60 நாட்கள் தண்ணீர் வழங்குவதென்றால், அதே போல், ஆழியாறு படுகை பகுதிக்கும், 60 நாட்களே தண்ணீர் வழங்க முடியும் என சமீப காலங்களில், அரசாணை பிறப்பித்துள்ளது வேதனையாக உள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: பரம்பிக்குளம் ஆழியாறு படுகையில், 1967 முதல் அதன் பாசனப்பரப்பு 2,02,152 ஏக்கராகும். அதை மூன்று மண்டலங்களாக பிரித்து, 18 மாதத்துக்கு ஒரு முறை தண்ணீர் கிடைக்கும்படி அமைக்கப்பட்டது. மேலும், 1,75,000 ஏக்கர் பாலாறு படுகையில் கூடுதலாக சேர்த்து மொத்தம், 3,77,152 ஏக்கர்களை நான்கு மண்டலங்களாக பிரித்து; ஒவ்வொரு மண்டலத்திற்கும் இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை தண்ணீர் வழங்க, 94ம் ஆண்டு அரசாணை வழங்கப்பட்டது.கடந்த 1994ம் ஆண்டு திருமூர்த்தி அணை நான்கு மண்டலங்களாக பிரித்த பின்பும், ஆழியாறு பாசனப்பகுதிக்கு, 2009 வரை குறைந்தது, 80 நாட்கள் அதிகப்படியாக, 110 நாட்கள் தண்ணீர் கிடைத்து வந்தது. ஆழியாறு படுகைக்குட்பட்ட பாசனம் பெறும் நிலங்களுக்கும், பாலாறு படுகைக்கு உட்பட பாசனம் பெறும் நிலங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது. ஆகவே, இரு பகுதிகளுக்கும் ஒரே மாதிரி பாவித்து பாசனம் வழங்கக்கூடாது.ஆழியாறு படுகை புதிய ஆயக்கட்டு பாசனப்பரப்பு, 42 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், பாலாறு படுகை பாசனப்பரப்பு 3,77,152 ஏக்கர் நிலங்களோடு ஒப்பிட்டு தண்ணீர் வழங்கினால், ஆழியாறு படுகை பாசனப்பகுதியில், சாகுபடி செய்துள்ள நிரந்த விவசாயமான தென்னை முற்றிலுமாக பாதிக்கப்படும். ஆகவே, ஆழியாறு பாசனப்பகுதிக்கு குறைந்தது, 90 நாட்கள் தண்ணீர் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகிறோம்.அதிகாரிகள், 45 நாட்கள் வழங்குவதாக தெரிவித்து, பின், 34 நாட்களாக குறைத்து

விட்டனர். தமிழக முதல்வர் இப்பிரச்னையில் தலையிட்டு, குறைந்தபட்சம், 60 நாட்களாவது இந்தாண்டு தண்ணீர் வழங்க வேண்டும். மழை வந்தால், கூடுதலாக தண்ணீர் வழங்கலாம். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## ராமநாதபுரம், ஆற்காட்டில் மரபு வார விழா நவ. 19 ல் இலவச தொல்லியல் கண்காட்சி

ராமநாதபுரம்,:ராமநாதபுரம், வேலுார் மாவட்டம் ஆற்காட்டில் நவ., 19 முதல் 25 வரை உலக மரபு வார விழா, இலவச தொல்லியல் கண்காட்சி நடத்த அரசு முடிவு செய்துள்ளது.தமிழகத்தில் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் 14 அகழ் வைப்பகங்கள் உள்ளன. இங்கு ஆய்வாளர்கள், மாணவர்கள், மக்கள் பார்வையிட அகழாய்வில் கிடைக்கும் தொல்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. ராமநாதபுரம் அரண்மனையில் ராமலிங்க விலாசத்தில் அகழ் வைப்பகம் செயல்படுகின்றன. ஆண்டுதோறும் தொல்லியல் பொருட்கள் குறித்து மாணவர்கள், மக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த உலக மரபு வார விழாவை, தொல்லியல்துறை கொண்டாடுகிறது.

இந்த ஆண்டு ராமநாதபுரம், ஆற்காட்டில் உள்ள அகழ் வைப்பகத்தில் நவ., 19 முதல் 25 வரை கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்கள் கண்காட்சியும், விளக்க கூட்டமும் நடக்கும். அகழ் வைப்பக காப்பாட்சியர் சக்திவேல் கூறியதாவது: ராமநாதபுரம் கண்காட்சியில் மூலிகை ஓவியங்கள், மன்னர் பயன்படுத்திய ஆயுதங்கள், அழகன்குளம் அகழாய்வில் எடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்கள் இடம்பெறும். தற்போது இவற்றை பார்வையிட சிறியவர் முதல்

பெரியவர் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வாரவிழாவில் அனைவருக்கும் அனுமதி இலவசம், என்றார்.

## 20 ஆண்டுகளுக்கு பிறகு விவசாய பணி துவக்கம்

மரக்காணம்: கூனிமேட்டில் 20 ஆண்டுகளக்கு பிறகு விவசாய பணிகள் துவங்கியது.

மரக்காணம் அடுத்த கூனிமேடு ஊராட்சியில், கடந்த 20 ஆண்டுகளாக, சாகுபடி நிறுத்தப்பட்டது. வேளாண்மைத் துறையினர் முயற்சியின் பேரில், தற்போது விவசாயிகள் சாகுபடி செய்ய முன் வந்தனர். இதன்படி, 100 ஏக்கரில் நாற்றாங்கால் பணிகளை, வேளாண் உதவிஇயக்குநர் கென்னடிஜெயக்குமார், நேற்று காலை துவக்கி வைத்தார். திண்டிவனம் வேளாண் விதை சான்று அலுவலர் சரவணன், வேளாண் அலுவலர் எத்திராஜ், உதவிஅலுவலர் மோகன்குமார், விவசாயிகள் காதர்பாஷா, ஜாபர், பாஸ்கர், அரிகிருஷ்ணன் கலந்து கொண்டனர்.

## வல்லம் ஒன்றியத்தில் மரக்கன்று நடும் விழா

செஞ்சி: வல்லம் ஒன்றியத்தில் 30 ஆயிரம் மரக்கன்றுகளை நடும் பணியை, சேர்மன் அண்ணாதுரை துவக்கி வைத்தார்.தமிழக அரசின் சார்பில் இந்தாண்டு 67 லட்சம் மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக வல்லம் ஒன்றியத்தில் உள்ள 66 ஊராட்சிகளிலும், 30 ஆயிரம் மரக்கன்றுகளை நட உள்ளனர். இதன் துவக்க விழா, வல்லம் ஊராட்சியில் நடந்தது. இங்குள்ள அய்யனார் கோவில் வளாகத்தில் 600 மரக்கன்றுகள்நடும் பணியை, ஒன்றிய சேர்மன் அண்ணாதுரை துவக்கி வைத்தார். பி.டி.ஓ.,க்கள் ரவிச்சந்திரன், மயில்சாமி முன்னிலை வகித்தனர். ஊராட்சி தலைவர் விநாயகம் வரவேற்றார். ஒன்றிய துணை சேர்மன் பரிமளா பன்னீர் செல்வம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆறுமுகம், துணை தலைவர் லட்சுமி அய்யப்பன், ஒன்றிய பணி மேற்பார்வையாளர் சவுந்தரராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாய கண்காட்சி

ரெட்டியார்சத்திரம்:பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் கிராம தங்கல் திட்டம் சார்பில், ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை வளாகத்தில் விவசாய கண்காட்சி நடந்தது. கல்லூரி முதல்வர் பாலமோகன் தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன் முன்னிலை வகித்தார். பேராசிரியர்கள் வேலுசாமி, சதீஷ் விவசாய நுட்பங்கள் குறித்து விளக்கினர்.கால்நடை மருத்துவர் தங்கவேல், கால்நடை பராமரிப்பு நுட்பங்களை விளக்கிப்பேசினார். மாடித்தோட்டம், வீட்டுத்தோட்டம், பசுமைக்குடில், வெங்காயப்பட்டறை, தென்னை டானிக், செங்குத்து தோட்டம் மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## நெல்லில் புகையான் தாக்குதல்கட்டுப்படுத்த ஆலோசனை

தேனி,: தேனி வட்டாரத்தில் நடவு செய்துள்ள நெல் பயிரில் பருவநிலை மாற்றத்தால் புகையான் தாக்குதல் ஏற்படும் சூழ்நிலை காணப்படுகிறது. எனவே, நெல் நடவு செய்துள்ள விவசாயிகள் 8 அடிக்கு ஒரு அடி பட்டம் விட்டு, பயிர்களை ஒதுக்கி விட வேண்டும். நீர்பாசனத்தில் காய்ச்சலும், பாய்ச்சலுமாக நிலத்தை வைத்திருக்க வேண்டும். நெல்லுக்கு மேல் உரமாக தழைச்சத்து இடுவதை பிரித்திட வேண்டும். புகையான் பூச்சி தாக்குதல் அறிகுறியாக நெல் பயிர் தூரின் அடிப்பாகத்தில் சிறிய "பிரவுன்' கலரில் தத்து பூச்சிகள் கூட்டமாக காணப்படும். இவை பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் பயிர்கள் தீயில் கருகியது போல் ஆங்காங்கே பரவலாக காணப்படும். ஒரு தூருக்கு 2 பூச்சிகள் சிலந்தி அல்லது ஒரு தூருக்கு ஒரு பூச்சி சிலந்தி இருக்கும் வயலில் பயிர் பாதுகாப்பு செய்ய தேவையில்லை. அதற்கு மேல் இருக்கும் பட்சத்தில் "குளோரி பைரிபாஸ்' 20 சதவீதம் இ.சி. 125 மில்லி ஒரு ஏக்கருக்கு தூரில் நன்றாக நனையும்படி தெளித்து கட்டுப்படுத்தலாம், என தேனி வேளாண்மை உதவி இயக்குனர் முத்துலட்சுமி தெரிவித்துள்ளார்.

## காளான் வளர்ப்பு பயிற்சி வகுப்பு

கம்பம்,:வைகை அணை அருகே உள்ள குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் இந்து, கீர்த்தனா, சந்தியா, உமாமகேஸ்வரி, காளியம்மாள், அஞ்சலி, பார்கவி, சின்னுமோல், உமா, ஹோசில் நிவேதிதா ஆகியார் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கம்பம் பகுதியில் முகாமிட்டு விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை விளக்கினர். கம்பம் அசோகன் என்பவரின் தோட்டத்தில் காளான் வளர்ப்பு குறித்து மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு பயிற்சியளித்தனர். காளான் உற்பத்தி செய்யும் முறை, அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினர்.

## அனைத்து விவசாயிகள் சங்க பொதுக்குழு கூட்டம்

சிவகங்கை:சிவகங்கையில் அனைத்து விவசாயிகள் சங்க பொதுக்குழு கூட்டம் நடந்தது. மாநில தலைவர் மாரிமுத்து தலைமை வகித்தார். காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் சங்க பொது செயலாளர் எம்.அர்ச்சுனன் பேசினார். பொது செயலாளர் எல்.ஆதிமூலம் அறிக்கை வாசித்தார். மாநில துணை செயலாளர்கள் சுந்தரராஜன், முருகேசன், வைகை பாசன விவசாயிகள் சங்க தலைவர் மதுரைவீரன், சிவகங்கை மாவட்ட செயலாளர் முருகன், ரவிக்குமார் பங்கேற்றனர்.தீர்மானம்: மத்திய, மாநில அரசுகள் வேளாண்மை துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும். நீர் பாசனத்துறை அமைச்சரகம் தனியாக உருவாக்க வேண்டும். நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,500 வழங்க வேண்டும். தனியார் கரும்பு ஆலைகளில் இருந்து ரூ.1,200 கோடி வசூலித்து வழங்க வேண்டும். மாநில குழு செல்லமுத்து சேதுபதி நன்றி கூறினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## ஏரிகளுக்கு கால்வாய் அமைக்கும் திட்டம்: அமைச்சர் ஆய்வு

பாலக்கோடு பகுதியில் ஏரிகளுக்கு கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் குறித்து மாநில உயர் கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் நேரில் ஆய்வு செய்தார்.

தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அருகே சின்னாற்றின் குறுக்கே சின்னாறு அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரை சின்னாறு அணையின் கீழ்ப்புறம் உள்ள ஜெர்தலாவ் கால்வாயின் நெடுகை 5000 மீட்டரில் ஒரு புதிய கால்வாய் அமைத்து பாலக்கோடு வட்டத்தில் உள்ள வறட்சியான எர்ரனஅள்ளி ஏரி, புலிகரை ஏரி, உப்பள்ளம் ஏரி, செங்கன் பசுவத்தலாவ் ஏரி, மாரண்டஹள்ளி ஏரி, தும்பலஅள்ளி, நாகசமுத்திரம் அணை மற்றும் சிந்தல்பாடி ஏரிகளுக்குக் கொண்டு செல்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் மூலம் 478.43 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்துக்கு 11.50 கி.மீ. நீளத்துக்கு புதிய கால்வாய் வெட்டப்பட வேண்டியுள்ளது. இதற்காக சுமார் 68.10 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இக்கால்வாயில் விநாடிக்கு 32.52 கன அடி நீர் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 15 நாள்களில் 14 ஏரிகளுக்கு நீர் சென்றடையும். இத்திட்டத்தின் மூலம் 1432 டன் கூடுதல் உணவு உற்பத்தியும், நிலத்தடி நீர் மட்டம் உயரவும், வறட்சியான பகுதிகளுக்கு தென்பெண்ணையாற்றில் வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரைக் கொண்டு செல்வதற்காக பயன்படும்.

இந்த திட்டம் தொடர்பாக, பாலக்கோடு பகுதியிலுள்ள 12 ஏரிகளுக்கு அமைச்சர் பி.பழனியப்பன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், பாலக்கோடு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் தொ.மு.நாகராசன், நல்லம்பள்ளி ஒன்றியக்குழுத் தலைவர் முனுசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்ரமணியம், உதவி செயற்பொறியாளர்கள் சிங்காரவேல், ஆதம்பாஷா, உதவிப் பொறியாளர் ரத்னவேல், குமரவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வறட்சி நிலவுவதால் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் வறட்சி நிலவுவதால், விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று, குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார். ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் என்.குணசேகரன், அக்கண்டராவ், வேளாண் துணை இயக்குநர் மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பேசுகையில், தண்டராம்பட்டு ஒன்றியத்தில் விவசாயிகளின் நலன் கருதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டும். மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக வறட்சி நிலவுவதால், வங்கிகளில் விவசாயிகள் பெற்ற வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.மாவட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறும் வகையில், மிருகண்டா அணையைத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.இதையடுத்துப் பேசிய ஆட்சியர் அ.ஞானசேகரன், விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் பரிசீலனை செய்யப்பட்டு,

உரிய முறையில் தீர்க்கப்படும். மாவட்டத்தில் போலி மருந்துகள் விற்பனையைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.கூட்டத்தில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.முத்தமிழ்செல்வன், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் இடைத்தரகர் தொல்லை**

கூட்டத்தில் பேசிய விவசாயிகள், திருவண்ணாமலை ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இடைத்தரகர்களின் தொல்லை அதிகமாக உள்ளது. இடைத்தரகர்கள் மூலமாகச் சென்றால் மட்டுமே ஓட்டுநர் உரிமம் பெற முடிகிறது.

இதற்கெல்லாம் அதிகப்படியான தொகையை வசூலிக்கின்றனர். எனவே, வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுடன் தொடர்பு வைத்துள்ள இடைத்தரகர்களை, அலுவலகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

**சம்பா சாகுபடிக்காக ரயிலில் வந்த 1314 டன் யூரியா உரம்**

புதுக்கோட்டை மாவட்ட சம்பா சாகுபடிக்காக ரயில் மூலம் வந்த 1314 மெட்ரிக் டன் யூரியாவை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு பிரித்து அனுப்பும் பணிகளை மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

இதன்பின்னர் ஆட்சியர் கூறியது:

தமிழக அரசு வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்களை போதுமான அளவில் இருப்பில் வைக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் மாவட்டத்துக்குத் தேவையான 1,314 மெட்ரிக் டன் யூரியா தூத்துக்குடியிலிருந்து சரக்கு ரயில் மூலம் புதுக்கோட்டைக்கு

வரவழைக்கப்பட்டுள்ளது. இதை மாவட்டத்திலுள்ள 87 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தற்போது அனுப்பி வைக்கப்படுகிறது. மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் அதற்குத் தேவையான உரங்களான யூரியா 2,102 டன், டி.ஏ.பி 628 டன், பொட்டாஷ் 657 டன், காம்ப்ளக்ஸ் 807 டன் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உர விற்பனை நிலையங்களில் யூரியா 2,442 டன், டி.ஏ.பி 424 டன், பொட்டாஷ் 772 டன், காம்ப்ளக்ஸ் 1,586 டன் உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை மட்டும் வாங்கி பயன்படுத்த வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் உரங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். உர விற்பனை நிலையங்களில் மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலையை விட கூடுதலாக தொகை கொடுக்க வேண்டாம். உரம் வாங்கியதற்கான ரசீதை தவறாமல் வாங்க வேண்டும். உர விற்பனையைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு வேளாண் உதவி இயக்குநர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாவட்டத்திலுள்ள உர உரிமம் பெற்ற 136 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 371 தனியார் உர விற்பனை நிலையங்களைக் கண்காணித்து வருகிறது. உரங்கள் குறித்த சந்தேகங்களுக்கு வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தை 04322-221666 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இதில் வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், உதவி இயக்குநர் (பொ) (தரக்கட்டுப்பாடு) உதயக்குமார், வருவாய் கோட்டாட்சியர் ப. ஜோதிலிங்கம், வேளாண் அலுவலர் (தரக்கட்டுப்பாடு) ஆதிலெட்சுமி, வட்டாட்சியர் ஜெயபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கடையக்குடி அருகே தடுப்பணை ஆய்வு**

புதுக்கோட்டை மாவட்டம் கடையக்குடி அருகே வெள்ளாற்றின் குறுக்கே சுமார் 80 ஆண்டுகளுக்கும் முன் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட ஹோல்ஸ்வொர்த் தடுப்பணையை மாவட்ட ஆட்சியர் வியாழக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

ஆங்கிலேயரால் சிறப்பு அந்தஸ்து அளிக்கப்பட்ட தனி சமஸ்தானமாக புதுக்கோட்டை விளங்கி வந்த காலத்தில் புதுக்கோட்டையை நிர்வகிக்க ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரி பி.ஜி. ஹோல்ஸ்வொர்த். இவர் கடந்த 1931-34 வரை பணியாற்றினார். அப்போது புதுக்கோட்டையின் முன்னேற்றத்துக்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டார். மேலும் வெள்ளாற்றின் குறுக்கே பல இடங்களின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட முடிவு செய்து ஆய்வுகள் செய்ய உத்தரவிட்டார். இதையடுத்து புதுகையிலிருந்து சுமார் 5 கி.மீ., தொலைவில் வெள்ளாற்றில் சுமார் ரூ. 10 ஆயிரம் செலவில் தடுப்பணை அமைக்கப்பட்டது. இந்த அணை சுமார் 8 அடி ஆழத்துக்கு நீரைத்தேக்கும் கொள்ளவு கொண்டதாகும். இதில் சேரும் தண்ணீர் கால்வாய் மூலம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய கண்மாயான வல்லநாடு கண்மாய்க்கு செல்கிறது. இங்கிருந்து, வாண்டாகோட்டை, வல்லத்திராக்கோட்டை, பூவரசக்குடி, கலங்குடி, மணியம்பலம் உள்ளிட்ட 5 ஊராட்சிகளைச் சார்ந்த சுமார் 2,200 ஹெக்டேர் பரப்பளவு விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில், இந்த அணைக்கட்டில் உள்ள ஷட்டர்களையும், கண்மாய்களுக்குச் செல்லும் கால்வாய்களையும் சீரமைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்தி வந்தனர்.

இதையடுத்து, மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா, வல்லத்திராக்கோட்டை முன்னாள் ஊராட்சித்தலைவர் ராமச்சந்திரன், பொதுப்பணித் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டனர்.

வல்லநாட்டுக் கண்மாய்க்குச் செல்லும் வாய்கால்களில் மண்டிக்கிடக்கும் செடிகளை தூர்வாருதல், சேதமடைந்த ஷட்டர்களை சீரமைப்பது ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டன.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விலை உயர்வை கட்டுப்படுத்த 40 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல் மத்திய அரசு அறிவிப்பு



புதுடெல்லி,

பருவமழை தவறியதால், உற்பத்தி குறைந்து, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவற்றின் விலை, கிலோ ரூ.200–ஐ தாண்டியுள்ளது. இதையடுத்து, விலை உயர்வை கட்டுப்படுத்த, 40 ஆயிரம் டன் பருப்பை

மத்திய அரசு கொள்முதல் செய்ய உள்ளது. இதுபற்றி மத்திய வேளாண்துறை இணை மந்திரி சஞ்சீவ் குமார் பல்யான் நிருபர்களிடம் கூறியதாவது:–

30 ஆயிரம் டன் துவரம் பருப்பும், 10 ஆயிரம் டன் உளுந்தம் பருப்பும் விவசாயிகளிடம் இருந்து சந்தை விலையில் வாங்கப்படும். டெல்லியில், அரசுக்கு சொந்தமான சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் இந்த துவரம் பருப்பு, கிலோ ரூ.130–க்குள் விற்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வடகிழக்கு பருவமழையால் கிடைக்கும் நீரை வீணாக்காமல் சேமிக்க வேண்டும்: சென்னை குடிநீர் வாரியம் வேண்டுகோள்

சென்னை,

வடகிழக்கு பருவமழையால் கிடைக்கும் நீரை வீணாக்காமல் சேமிக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு, சென்னை குடிநீர் வாரியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடகிழக்கு பருவமழை

இதுகுறித்து சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் டாக்டர் பி.சந்திரமோகன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வானிலை ஆய்வு மைய தகவல்களின்படி, இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின் போது அதிகளவில் மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு பெய்யும் மழைநீரை வீணாக்காமல் தடுப்பதற்கு பொதுமக்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கி நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கு ஒத்துழைக்க பொதுமக்களுக்கு குடிநீர் வாரியம் அறிவுறுத்தியுள்ளது. கடந்த ஆண்டுகளில் மழை அளவு குறைவாக இருந்த போதிலும் சென்னை நகரின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திருப்பதற்கு சென்னை மக்கள் மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தி அதனை திறம்பட பராமரித்ததே முக்கிய காரணம்.

விளம்பர அட்டைகள்

இந்த ஆண்டும் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே உருவாக்க சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மழைநீர் சேகரிப்பு முறைகள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்த பராமரிப்பு முறைகள், கழிவுநீர் அமைப்புகளை பராமரிக்க தவிர்க்கப்பட வேண்டிய முறைகள், குடிநீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்துவது என்பது குறித்த விவரங்கள் அடங்கிய விளம்பர அட்டைகளை வணிக வளாகங்களிலுள்ள நுழைவுவாயில் கதவுகளிலும் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள நுழைவுவாயில் கதவுகளிலும் இலவசமாகக் குடிநீர் வாரியத்தால் பொருத்தப்பட்டு வருகின்றன.

கோடைக்கால பயன்பாடு

பொதுமக்கள் பொதுவாக தாங்கள் வசிக்கும் கட்டிடங்களின் மொட்டை மாடியில் பெய்யும் மழைநீரை வடிகுழாய் மூலம் நேரடி உபயோகத்திற்காக தொட்டிகள் மூலமும், உபரி நீரை கிணறுகளுக்கும்

எடுத்துச் செல்கிறார்கள். கட்டிடங்கள் தவிர வீடுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்யும் மழைநீரையும் வீணாக்காமல் நுழைவுவாயில் அருகே ஒரு கால்வாய் ஏற்படுத்தி அதிலிருந்து நீரூட்டல் கிணறுகள் அமைத்து நீரைச் சேமிக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.சென்னை நகரின் நீர்த் தாங்கிகள் பெரும்பாலும் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்குப் பருவமழையையே சார்ந்துள்ளது. பொதுவாக வடகிழக்குப் பருவமழை மூலமே சென்னை நகரின் நீர்ந்தாங்கிகள் அதிகமாக செரிவூட்டப்படுகின்றன. அவ்வாறு செரிவூட்டப்படும் மழைநீர்தான் சென்னையின் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு வழி வகுப்பதோடு அடுத்த கோடைக் கால பயன்பாட்டிற்கும் உதவியாக உள்ளது.

மழைநீர் சேகரிப்பு

ஒரு சதுர அடியில் ஒரு வருடத்தில் கிடைக்கப்பெறும் மழையின் அளவு- 113 லிட்டர்கள். 2,400 சதுர அடி பரப்பளவுள்ள வீட்டுமனையில் பெய்யும் மழையின் அளவு- 2,71,200 லிட்டர்கள். பூமிக்குள் செலுத்தக்கூடிய மழைநீரின் அளவு 60 சதவீதம் என்ற அளவில்- 1,62,720 லிட்டர்கள். ஒரு வருடத்தில் 2,400 சதுர அடி பரப்பளவுள்ள இடத்திலிருந்து 1,62,720 லிட்டரை நாம் மழைநீர் சேகரிப்பின் மூலம் திரும்ப பூமிக்குள் செலுத்தி ஈடுகட்டுவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் குறைவதை பெரிதும் தவிர்க்கலாம். எனவே வடகிழக்கு பருவழையால் கிடைக்கும் நீரை வீணாக்காமல் மழைநீர் சேகரிப்பு முயற்சிகளை அனைத்து மக்களும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**சேலம் அரசு மகளிர் கல்லூரியில் மூலிகை தோட்டம் மூலம் செயல்முறை கல்வி**



▲ சேலம் அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மூலிகை தோட்டத்தில் உள்ள செடிகள் குறித்து மாணவிகளுக்கு விளக்கம் அளிக்கும் பேராசிரியை.

சேலம் அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் தாவரவியல் துறை சார்பில் மூலிகை தோட்டம் அமைத்து மாணவியர்களுக்கு நேரடி செயல்முறை கல்வி கற்பிக்கும் புதிய முறையை அறிமுகம் செய்துள்ளனர்.

சேலம் ஏற்காடு மெயின் ரோட்டில் உள்ள பெண்கள் கலைக் கல்லூரியில் தாவரவியல் துறை மற்றும் மரம் வளர்ப்புக் குழுமம் சார்பில் கல்லூரி முதல்வர் செ.மணிமொழி தலைமையில், தாவரவியல் துறை தலைவர் க.விஜயகுமாரி, ஒருங்கிணைப் பாளராக செயல்பட்டு வருகிறார்.

கல்லூரியில் பயிலும் தாவரவியல் பாடப்பிரிவு மாணவி யர்கள் நேரடியாக தாவரங்களின் தன்மை, அதன் குணாதிசயங்கள் மற்றும் தாவரங்களின் வளர்ச்சி குறித்த கல்வி முறையை நேடியாக கண்டறிந்து, பாடம் பயிற்றுவிக்கும் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து, கல்லூரி வளாகத்தில் தாவரயில் துறை சார்பில் மூலிகை தோட்டம் கடந்த 12-ம் தேதி அமைக்கப்பட்டது.

தோட்டத்தில் காட்டாமணக்கு, புலிச்சை, இன்சுலின் தாவரம், குப்பைமேனி, குண்டுமணி, இஞ்சி, கீழாநெல்லி, பேய்விரட்டி, வசம்பு,

சிறுநெறி, மூக்கரட்டை உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமான அரியவகை மூலிகை தாவரங்கள் பயிரிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய காலகட்டத்தில் அலோபதி மருந்துகளால் நோய்கள் முழுமையாக குணமடைந்த போதிலும் அதன் பக்க விளைவுகளால் மக்கள் துன்புற்று வருகின்றனர். எனவே, வளரும் சமுதாயத்தின் முக்கிய அங்கமாகிய மாணவியர்களுக்கு மூலிகைச் செடிகளின் முக்கியத்துவத்தை அறியும் பொருட்டு மூலிகை பண்ணையை கல்லூரி மாணவியர்களாலேயே பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள மூலிகை செடிகளின் மூலம் இருதய நோய், நீரிழிவு நோய், மாதவிடாய் கோளாறுகள், ஆஸ்துமா, சளி, காய்ச்சல், கொழுப்பு குறைதல், புற்று நோய், மூட்டு வலி, மலச்சிக்கல், கண்நோய்கள், வயிற்றுப்போக்கு, ரத்த சோகை, சிறுநீரகக் கோளாறுகள், பாம்புக்கடி, தேள்கடி, வாதநோய், அம்மை நோய், காலரா, மஞ்சள்காமாலை, தோல் வியாதிகள் போன்ற நோய்கள் எந்தவிதமான பக்க விளைவுகளும் இல்லாமல் பூரணமாக குணமடையும் தன்மையை கல்லூரி பேராசிரியர்கள் மாணவியருக்கு நேரடி செயல்முறை விளக்கத்துடன் கற்பித்து வருவது மாணவியரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து கல்லூரி முதல்வர் மணிமொழி கூறுகையில், ‘‘தாவரவியல் துறை பேராசிரியர்கள் புதிய முயற்சியாக கல்லூரியில் மூலிகை தோட்டம் அமைத்து, மாணவியர்களுக்கு கற்பித்து வருகின்றனர். தமிழகத்தில் குயின் மேரீஸ் கல்லூரிக்கு அடுத்தபடியாக சேலம் பெண்கள் கலைக் கல்லூரியில் மூலிகை தோட்டம் அமைத்து, நேரடி கல்வி முறையை அறிமுகம் செய்துள்ளோம். இதன் மூலம் மாணவியர்கள் தாவரவியல் பாட சம்பந்தமாக கண்கூடான கல்வி கற்று, பல்வேறு சந்தேகங்களுக்கு ஆசிரியர்கள் மூலம் தெளிவுபெற வசதியாக உள்ளது” என்றார்.

## விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த_ 40,000 டன் பருப்பு கொள்முதல்_: மத்திய அரசு தகவல்



விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த 40 ஆயிரம் டன் பருப்பு வகைகள் கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய வேளாண் இணையமைச்சர் சஞ்சீவ் குமார் பல்யாண் தெரிவித்துள்ளார்.

உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு ஆகியவற்றின் விலை சந்தையில் கணிசமாக அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

பருவமழை போதிய அளவு பெய்யாததால் தானியங்களின் உற்பத்தி குறைந்துள்ளது. மேலும் பருப்பு வியாபாரிகளும் இடைத் தரகர்களும் தானியங்களை குடோன் களில் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்கின்றனர். இதைத் தடுக்க விவசாயிகளிடம் அரசு நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் விவசாயி களிடம் இருந்து சந்தை விலையில் பருப்பு வகைகளை வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மத்திய வேளாண் இணையமைச்சர் சஞ்சீவ் குமார் பல்யாண் டெல்லியில் நிருபர்களிடம் நேற்று கூறியதாவது: பருவமழை பொய்த்ததால் பருப்பு விளைச்சல் குறைந்துள்ளது. இதை சில வியாபாரிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

எனவே விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசே நேரடியாக 40 ஆயிரம் டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே 5 ஆயிரம் டன் பருப்பு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக 2 ஆயிரம் டன் இறக்குமதி செய்யப் படும். இதன் மூலம் விலைஉயர்வு கட்டுப்படுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## விலை உயர்வை கட்டுப்படுத்த 40 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல்: மத்திய அரசு அறிவிப்பு



புதுடெல்லி, அக்.17-

பருவமழை தவறியதால், உற்பத்தி குறைந்து, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவற்றின் விலை, கிலோ ரூ.200-ஐ தாண்டியுள்ளது. இதையடுத்து, விலை உயர்வை கட்டுப்படுத்த, 40 ஆயிரம் டன் பருப்பை மத்திய அரசு கொள்முதல் செய்ய உள்ளது. இதுபற்றி மத்திய வேளாண்துறை இணை மந்திரி சஞ்சீவ் குமார் பல்யான் நிருபர்களிடம் கூறியதாவது:-

30 ஆயிரம் டன் துவரம் பருப்பும், 10 ஆயிரம் டன் உளுந்தம் பருப்பும் விவசாயிகளிடம் இருந்து சந்தை விலையில் வாங்கப்படும். டெல்லியில், அரசுக்கு சொந்தமான சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் இந்த துவரம் பருப்பு, கிலோ ரூ.130-க்குள் விற்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**பருப்பு வகைகளின் விலை கடந்த சில நாள்களாக விஷம் போல ஏறி வருவதாக பொதுமக்கள் கவலை**



சென்னை: பருப்பு வகைகளின் விலை கடந்த சில நாள்களாக விஷம் போல ஏறி வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். வெங்காயத்தின் விலை குறைந்து வரும் நிலையில் வருப்பு வகைகளின் விலை உயர்வு, ஏழை மற்றும் நடுத்தர மக்களை கடுமையாக பாதித்துள்ளது. 15 நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.130க்கு விற்ற துவரம் பருப்பு விலை தற்போது ரூ.200ஆக உயர்ந்துள்ளது. உளுத்தம் பருப்பு, பாசி பருப்பு ஆகியவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் ஏமாற்றம் அடைந்துள்ள குடும்ப தலைவிகள் சாம்பார் வைப்பதை குறைத்துவிட்டதாக வருத்தம் தெரிவித்துள்ளனர். பருப்பு வகைகளின் விலை உயர்வு பொதுமக்களை மட்டுமல்லாது அவற்றை விற்பனை செய்யும் கடைக்காரர்களையும் பாதித்துள்ளது. நாள்தோறும் 20 முதல் 30 கிலோ துவரம் பருப்பு விற்ற நிலையில் தற்போது 5 கிலோ

கூட விற்பதில்லை என கவலை தெரிவித்துள்ளனர். பருப்பு வகைகளின் விலை உயர்வுக்கு ஆன்லைன் வர்த்தகம் ஒரு காரணம் என கூறப்படுகிறது. இருந்தபோதிலும் மத்திய, மாநில அரசுகள் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கை.

**விவசாயிகளிடம் இருந்து 40,000 டன் பருப்பு வாங்க மத்திய அரசு முடிவு**



புதுடெல்லி: மத்திய அரசு விவசாயிகளிடம் இருந்து சந்தை விலையில் 30,000 டன் துவரம் பருப்பு, 10,000 டன் உளுத்தம் பருப்பு வாங்க முடிவு செய்துள்ளதாக மத்திய விவசாயத்துறை இணையமைச்சர் சஞ்சீவ் குமார் பல்யான் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது: பொதுமக்களுக்கு மலிவு விலையில் பருப்பு கிடைக்கும் வகையில் டெல்லி, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட துவரம்பருப்பு ரூ.120 முதல் ரூ.130 வரை விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பருப்பு விலையை கட்டுப்படுத்த சந்தை சப்ளையை அதிகரித்து தட்டுப்பாட்டை போக்கவும் இறக்குமதி செய்து இருப்பு வைப்பது பற்றியும் இந்த வார துவக்கத்தில் மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.இதை தொடர்ந்து உள்நாட்டில் விவசாயிகளிடம் 30,000

டன் துவரம் பருப்பு, 10,000 டன் உளுத்தம் பருப்பு சந்தை விலையில் வாங்குவதற்கு மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது. அடுத்த மாதத்தில் இருந்து தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய துவங்கும். இவை சந்தைக்கு அனுப்பப்படும். இறக்குமதியை பொறுத்தவரை, இந்திய உலோகம் மற்றும் கனிம வர்த்தக நிறுவனம் 5,000 டன் துவரம் பருப்பு இறக்குமதியை செய்துள்ளது. இன்னும் 2,000 டன் துவரம்பருப்பு இறக்குமதிக்கு டெண்டர் விரைவில் இறுதி செய்யப்படும். இவ்வாறு சஞ்சீவ் குமார் பல்யான் கூறினார்.

**முட்டை விலை உயர்வு**

நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் ஒரு முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு 307 காசாக நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாடு, கேரளாவில் முட்டை விற்பனை அதிகரித்துள்ளதால் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த சில நாட்களாக ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 302 காசாக இருந்தது. ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.58, ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.53ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**தஞ்சை வாடல், குருத்தழுகல் நோயை கட்டுப்படுத்தும் முறை தென்னையை தாக்கும் விவசாயிகளுக்கு ே◌யாசனை**

சேதுபாவாசத்திரம், : தென்னையை தாக்கும் நோய்களில் மிக முக்கியமானது தஞ்சை வாடல் மற்றும் குருத்தழுகல் நோயாகும். இந்நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்து. இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

தஞ்சை வாடல்நோய் தாக்கிய தென்னை மரங்களில் தண்டு பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த சாறு வடியும். அடிமட்டைகள் பழுப்பு நிறமடைந்து காய்ந்து தொங்கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இவற்றை கட்டுப்படுத்த வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்றுக்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50 கிலோ தொழு உரம் மற்றும் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து இட வேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலமும் நோய் தாக்குதலை குறைக்க முடியும். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50 கிலோ மக்கிய தொழு எருவுடன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந்நோயை கட்டுப்படுத்தலாம். பாஸ்போ பாக்டீரியா என்ற நுண்ணுயிர் 200 கிராமுடன் (1 பாக்கெட்) 10 கிலோ தொழு உரம் கலந்து இடுவதன் மூலம் நோயின் பாதிப்பை குறைக்கலாம். நோய் தாக்கிய ஒவ்வொரு மரத்துக்கும் 40 லிட்டர் வீதம் 1 சத போர்டோ கலவையை (400 கிராம் மயில்துத்தத்தை 20 லிட்டர் நீரிலும், 400 கிராம் நீர்த்த சுண்ணாம்பை 20 லிட்டர் நீரிலும் கரைத்த கலவை) மரத்தை சுற்றி 1.8 மீட்டர் வட்டப்பாத்தியில் மண் நன்றாக நனையுமாறு ஊற்றினால் நோய் பூஞ்சானத்தை அழிக்கலாம். இந்நோயை கட்டுப்படுத்த ஆரியோ பஞ்சினால் 2 கிராம், தாமிர சல்பேட் 1 கிராம் ஆகியவற்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண்டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு தடிமனுள்ள புதிய இளஞ்சிவப்பு வேரை கூரிய கத்தியால் சாய்வாக வெட்டி மேற்படி கரைசல் உள்ள பாலித்தீன் பையில் நுழைத்து கட்டி வைக்க வேண்டும். குருத்தழுகல் நோயானது தென்னங்கன்று, இளம் மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சை நிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதை கட்டுப்படுத்த ஒரு கிலோ மயில்துத்தம் மற்றும் ஒரு கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5 லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசையை

தயாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குருத்து பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்து கொண்டால் இந்நோய் எளிதில் கட்டுப்படும்.

**மணப்பாறை வட்டார விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள்**

மணப்பாறை, : மணப்பாறை வட்டாரத்தில் சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. மணப்பாறை வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சோளம் உயர் தொழில்நுட்ப செயல்விளக்கம் 250 ஏக்கரில் அமைத்திட விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு விதைக்கும் கருவி கொண்டு விதைக்கும் பணி தொடங்கப்பட்டது. இதையொட்டி மாவட்ட வேளாண் துணை இயக்குநர் சரவணன்ஆனாம்பட்டி கிராமத்தில் சோளம் செயல்விளக்கத்திற்கான இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார். சிஎஸ்வி 23 சோளம் உயர் விளைச்சல் ரகம் பயன்படுத்துதலையும், நுண்சத்து இடுதல், விதை நேர்த்தி செய்து விதைத்தல் போன்ற தொழில் நுட்பங்களை முறையாக கடைபிடித்து அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக் கொண்டார். மணப்பாறை வேளாண்மை உதவி இயக்குநர் சேட்முகமது பேசும்போது, விதைக்கும் கருவி கொண்டு சோளம் விதைப்பு செய்யும்போது தேவையான பயிர் எண்ணிக்கை சீராக பராமரிக்கப்படுகிறது. இயந்திரம் மூலம் சோளம் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ4,000 மானியம் வழங்கப்படுகிறது என தெரிவித்தார். இதனைத்தொடார்ந்து மண்வளத்தினை அதிகப்படுத்திட தக்கைப்பூண்டு சாகுபடி செய்துள்ள ஆனாம்பட்டியை சேர்ந்த விவசாயி மார்க்கண்டேயன், சமத்துவபுரம் கிராமத்தில் கோஆர் 50 நெல் விதைப்பண்ணை அமைத்துள்ள விவசாயி பிரபு ஆகியோரின் வயல்களை ஆய்வு செய்தார். ஆய்விற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் காசிவிஸ்வநாதன், சிவக்குமார், கணேசன், விஜயரத்தினம், சிவக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**திருச்சி மாவட்டத்தில் வேளாண்மை திட்டப்பணிகளை உரியகாலத்தில் முடிக்க வேண்டும் ஆய்வு செய்த துணைஇயக்குனர் அறிவுறுத்தல்**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலக வேளாண்மை துணை இயக்குனர் ஜார்ஜ்மேனன் ஆய்வு மேற்கொண்டார். சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலக வேளாண்மை துணை இயக்குனர் ஜார்ஜ்மேனன் திருச்சி மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தார். திருவெறும்பூர் வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் நெல் இயக்கத்தில் தேனேரிப்பட்டி கிராமத்தில் இயந்திர நெல்நடவு செயல்விளக்கத்தை ஆய்வு செய்தார். பின்னர், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 4 வரிசை நெல் நடவு இயந்திரத்தை பார்வையிட்டு, பயனாளிக்கு நடவு இயந்திரத்தின் பயன்களை விளக்கினார். இந்த நடவு செயல்முறைக்கு அளிக்கப்படும் அரசு மானியத்திட்டம் பற்றி விளக்கிக் கூறினார். பின், கூத்தைப்பார் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட தக்கைப் பூண்டு பசுந்தாள் உரப்பயிரை பார்வையிட்டார். ஆய்வின்போது, திருச்சி வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன், வேளாண்மை துணை இயக்குனர் (மாநிலத் திட்டம்) சரவணன் ஆகியோர் உடனிருந்தனர். பின்பு வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்த வட்டார வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அனைத்துத் திட்டப் பணிகளையும் உரிய காலத்தே முடிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். தற்பொழுது பெய்து வரும் மழையைக் கொண்டு மானாவாரி பயிர்களில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப் பயன்களையும், உரிய பயனாளிகளுக்கு வழங்கி சாதனை புரிந்திடுமாறு கேட்டுக் கொண்டார்.